CAREERINDIA

Language Code : **17**

इस पुस्तिका में **20** मुद्रित पृष्ठ हैं।
This booklet contains **20** Printed pages.

# SED-24-I

**प्रश्न-पत्र-I / PAPER-I**
**तमिल भाषा परिशिष्ट**
**Tamil Language Supplement**
**भाग-IV & V / PART-IV & V**

**मुख्य परीक्षा पुस्तिका संख्या / Main Test Booklet No.**

**मुख्य परीक्षा पुस्तिका कोड / Main Test Booklet Code**

**I**

**इस परीक्षा पुस्तिका को तब तक न खोलें जब तक कहा न जाए।**
**Do not open this Test Booklet until you are asked to do so.**
**इस परीक्षा पुस्तिका के पिछले आवरण (पृष्ठ 19 व 20) पर दिए निर्देशों को ध्यान से पढ़ें।**
**Read carefully the Instructions on the Back Cover (Page 19 & 20) of this Test Booklet.**

**तमिल में निर्देशों के लिए इस पुस्तिका का पृष्ठ 2 देखें। / FOR INSTRUCTIONS IN TAMIL SEE PAGE 2 OF THIS BOOKLET.**

## परीक्षार्थियों के लिए निर्देश

1. यह पुस्तिका मुख्य परीक्षा पुस्तिका की एक परिशिष्ट है, उन परीक्षार्थियों के लिए जो **या** तो भाग IV (भाषा I) **या** भाग V (भाषा II) **तमिल** भाषा में देना चाहते हैं, लेकिन **दोनों नहीं**।
2. परीक्षार्थी भाग I एवं भाग II **या** III के उत्तर मुख्य परीक्षा पुस्तिका से दें और भाग IV व V के उत्तर उनके द्वारा चुनी भाषाओं से।
3. अंग्रेज़ी व हिन्दी भाषा पर प्रश्न मुख्य परीक्षा पुस्तिका में भाग IV व भाग V के अन्तर्गत दिए गए हैं। भाषा परिशिष्टों को आप अलग से माँग सकते हैं।
4. इस पृष्ठ पर विवरण अंकित करने एवं OMR उत्तर पत्र पर निशान लगाने के लिए **केवल काले/नीले बॉल पॉइंट पेन** का प्रयोग करें।
5. इस भाषा पुस्तिका का **संकेत** है **I**। यह सुनिश्चित कर लें कि इस भाषा परिशिष्ट पुस्तिका का संकेत, OMR उत्तर पत्र के **पृष्ठ-2** एवं मुख्य परीक्षा पुस्तिका पर छपे संकेत से मिलता है। अगर यह भिन्न हो, तो परीक्षार्थी दूसरी भाषा परिशिष्ट परीक्षा पुस्तिका लेने के लिए निरीक्षक को तुरन्त अवगत कराएँ।
6. इस परीक्षा पुस्तिका में **दो** भाग IV और V हैं, जिनमें **60** वस्तुनिष्ठ प्रश्न हैं, जो प्रत्येक 1 अंक का है :
   भाग-IV : भाषा-I (तमिल) (प्र. 91 से प्र. 120)
   भाग-V : भाषा-II (तमिल) (प्र. 121 से प्र. 150)
7. भाग-IV में भाषा-I के लिए 30 प्रश्न और भाग-V में भाषा-II के लिए 30 प्रश्न दिए गए हैं। इस परीक्षा पुस्तिका में केवल तमिल भाषा से संबंधित प्रश्न दिए गए हैं। **यदि भाषा-I और/या भाषा-II में आपके द्वारा चुनी गई भाषा(एँ) तमिल के अलावा है तो कृपया उस भाषा वाली परीक्षा पुस्तिका माँग लीजिए। जिन भाषाओं के प्रश्नों के उत्तर आप दे रहे हैं वह आवेदन पत्र में चुनी गई भाषाओं से अवश्य मेल खानी चाहिए।**
8. **परीक्षार्थी भाग-V (भाषा-II) के लिए, भाषा सूची से ऐसी भाषा चुनें जो उनके द्वारा भाषा-I (भाग-IV) में चुनी गई भाषा से भिन्न हो।**
9. रफ कार्य परीक्षा पुस्तिका में इस प्रयोजन के लिए दी गई खाली जगह पर ही करें।
10. सभी उत्तर केवल OMR उत्तर पत्र पर ही अंकित करें। अपने उत्तर ध्यानपूर्वक अंकित करें। उत्तर बदलने हेतु श्वेत रंजक का प्रयोग निषिद्ध है।

## INSTRUCTIONS FOR CANDIDATES

1. This booklet is a supplement to the Main Test Booklet for those candidates who wish to answer **EITHER** Part IV (Language I) **OR** Part V (Language II) in **TAMIL** language, but **NOT BOTH**.
2. Candidates are required to answer Part I and Part II **OR** III from the Main Test Booklet and Parts IV and V from the languages chosen by them.
3. Questions on English and Hindi languages for Part IV and Part V have been given in the Main Test Booklet. Language Supplements can be asked for separately.
4. Use **Black/Blue Ball Point Pen only** for writing particulars on this page/marking responses in the OMR Answer Sheet.
5. The CODE for this Language Booklet is **I**. Make sure that the CODE printed on **Side-2** of the OMR Answer Sheet and on your Main Test Booklet is the same as that on this Language Supplement Test Booklet. In case of discrepancy, the candidate should immediately report the matter to the Invigilator for replacement of the Language Supplement Test Booklet.
6. This Test Booklet has **two** Parts, IV and V, consisting of **60** Objective Type Questions, each carrying 1 mark :
   Part-IV : Language-I (Tamil) (Q. 91 to Q. 120)
   Part-V : Language-II (Tamil) (Q. 121 to Q. 150)
7. Part-IV contains 30 questions for Language-I and Part-V contains 30 questions for Language-II. In this Test Booklet, only questions pertaining to Tamil language have been given. **In case the language/s you have opted for as Language-I and/or Language-II is a Language other than Tamil, please ask for a Test Booklet that contains questions on that language. The language being answered must tally with the languages opted for in your Application Form.**
8. **Candidates are required to attempt questions in Part-V (Language-II) in a language other than the one chosen as Language-I (in Part-IV) from the list of languages.**
9. Rough work should be done only in the space provided in the Test Booklet for the same.
10. The answers are to be recorded on the OMR Answer Sheet only. Mark your responses carefully. No whitener is allowed for changing answers.

परीक्षार्थी का नाम (बड़े अक्षरों में) : ____________________
Name of the Candidate (in Capitals) :
अनुक्रमांक : (अंकों में) / Roll Number : in figures ____________________
: शब्दों में / in words ____________________
परीक्षा केन्द्र (बड़े अक्षरों में) : ____________________
Centre of Examination (in Capitals) :
परीक्षार्थी के हस्ताक्षर : ____________________ निरीक्षक के हस्ताक्षर : ____________________
Candidate's Signature : Invigilator's Signature :
Facsimile Signature Stamp of
Centre Superintendent : ____________________

www.careerindia.com

CAREERINDIA

Language Code : **17**

# SED-24-I

தேர்வு நூற்கட்டு சங்கேதக் குறியீடு

**I**

இந்த நூற்கட்டு 20 பக்கங்கள் கொண்டது

தாள்–I

## தமிழ் மொழி துணை நூற்கட்டு

## பகுதி IV & V

**அவிழ்க்கச் சொல்லப்படும் வரை யாரும் இந்த நூற்கட்டை அவிழ்க்கக் கூடாது.**

**இந்த நூற்கட்டின் பின்பக்க உறைப்பகுதியில் (பக்கம் 19 & 20) காணப்படும் வழிகாட்டுதல் குறிப்புகளைக் கவனமாகப் படிக்கவும்.**

**தேர்வு எழுதுவோர்க்கான வழிகாட்டுக் குறிப்புகள் :**

1. இந்நூற்கட்டு முக்கிய தேர்வு நூற்கட்டுக்கான இணைப்பாகும். இது பகுதி IV (மொழி–I) **அல்லது** பகுதி V க்கு (மொழி II) தமிழ் மொழியில் விடையளிக்க விரும்புவோர்க்கு மட்டுமே உரியது. **இரண்டிற்கும் உரியது அல்ல.**
2. தேர்வு எழுதுவோர் முக்கிய தேர்வு நூற்கட்டின் பகுதி I, II, III க்கும் அவர்கள் தேர்ந்தெடுத்த மொழிகளின் பகுதி IV, V ஆகியவற்றிற்கும் விடை அளிக்கவும்.
3. ஆங்கிலம் மற்றும் ஹிந்தி மொழிகளின் பகுதி IV மற்றும் பகுதி V ற்கான வினாக்கள் முக்கிய தேர்வு நூற்கட்டில் கொடுக்கப்பட்டுள்ளன. மொழி இணைப்பைத் தனியாக வாங்கிக் கொள்ள வேண்டும்.
4. இப்பக்கத்தில் வினவப்படும் உரிய விவரங்களை/விடைத்தாளில் நீர் மேற்கொள்ளும் பதில் வினையை **நீலம்/கருப்பு மை பந்துருள்முனைப் பேனாவினால் மட்டும் நிரப்புக.**
5. இந்நூற்கட்டின் சங்கேதக் குறியீடு **I** ஆகும். இந்நூற்கட்டின் மீதும் இதன் **பக்கம் 2-லும்** அச்சாகி உள்ள சங்கேதக் குறியீடுகள் இரண்டும் ஒன்றேதானா என்பதைச் சரிபார்த்து உறுதி செய்து கொள்க. மேலும் உம் தேர்வு நூற்கட்டு எண்ணும் விடைத்தாள் எண்ணும் ஒன்றேதானா என்பதையும் சரிபார்த்து உறுதி செய்துகொள்க. இவை ஒன்றோடு ஒன்று முரணாக இருக்குமேயானால் தேர்வு எழுதுபவர் இது பற்றி உடனே தேர்வு மேற்பார்வையாளர் கவனத்திற்குக் கொண்டு செல்ல வேண்டும். வேறொரு தேர்வு நூற்கட்டு மற்றும் வேறொரு விடைத்தாள் ஆகிய இரண்டையும் அவற்றிற்குப் பதிலாகக் கேட்டுப் பெற வேண்டும்.
6. இந்த தேர்வு நூற்கட்டு **2** பகுதிகள் கொண்டது. ஒரே ஒரு மதிப்பெண் நேரிய **60** பல் விடை வினாக்கள் கொண்ட இப்பகுதிகள் முறையே **IV & V** என்றவாறாக அமையும்.
   பகுதி-IV : மொழி-I (தமிழ்) (வினாக்கள் 91 முதல் 120 வரை)
   பகுதி-V : மொழி-II (தமிழ்) (வினாக்கள் 121 முதல் 150 வரை)
7. பகுதி-IV இல் மொழி-I க்கும், பகுதி-V இல் மொழி-II க்கும் தலா 30 வினாக்கள். இத்தேர்வு நூற்கட்டில் தமிழ் மொழிக்கான வினாக்கள் மட்டுமே உள்ளன. தமிழ் மொழி நீங்கப் பிறமொழி எதனையேனும் மொழி I & II க்கு நீர் தெரிவு செய்திருப்பின் அம்மொழிக்குரிய வினாக்கள் கொண்ட தேர்வு நூற்கட்டைக் கேட்டுப் பெறவும். நீர் தேர்வு விண்ணப்பப் படிவத்தில் குறிப்பிட்டுள்ள மொழி தேர்ந்தெடுப்பும், தேர்வு நூற்கட்டில் எழுதியுள்ள விடை மொழியும் ஒன்றாகவே இருக்க வேண்டும்.
8. தேர்வு எழுதுவோர், மொழிகள் பட்டியலிலிருந்து தேர்ந்து கொண்ட மொழி-**I** (பகுதி **IV** இல்) நீங்கலாகப் பிற வேறொரு மொழியை மொழி-**II** (பகுதி-**V** க்கு) தேர்ந்து கொண்டு விடையளிக்க வேண்டும்.
9. இத்தேர்வு நூற்கட்டில் ஒதுக்கப்பட்டுள்ள முன்வரைவுப் பகுதியில் மட்டும் திருந்தாப் பதிவுகள் இடம் பெற வேண்டும்.
10. ஓ.எம்.ஆர். (OMR) விடைத்தாளில் மட்டுமே விடைகள் பதிவு செய்யப்பட வேண்டும். பதில் வினைகளைக் கவனமாகப் பதிவு செய்க. விடையைத் திருத்தம் செய்து மாற்றி எழுத வெண்ணிற மை ஏதும் பயன்படுத்தக் கூடாது.

தேர்வு எழுதுபவர் பெயர் (தலைப்பு எழுத்துகளில்) ____________________

தேர்வு வரிசை எண் : எண்ணில் ____________________

: எழுத்தில் ____________________

தேர்வு மையம் (தலைப்பு எழுத்துகளில்) ____________________

தேர்வு எழுதுபவர் கையொப்பம் : ____________________

தேர்வு மேற்பார்வையாளர் கையொப்பம் : ____________________

Facsimile signature stamp of Centre Superintendent : ____________________

www.careerindia.com

CAREERINDIA

தேர்வு எழுதுவோர் **தமிழைத்**, **தமிழ்-I** மொழியாக தேர்ந்தெடுத்திருந்தால் மட்டுமே **பகுதி-IV (கே.எண்: 91 - 120)** -க்கான விடைகளைத் தரவேண்டும்.

Candidates should attempt the questions from **Part-IV (Q.No. 91-120)**, if they have opted **TAMIL** as **Language-I** only.

→

www.careerindia.com

CAREERINDIA

## PART–IV

## LANGUAGE–I

## தமிழ்

**பகுதித் தேர்வு எழுதுவோர் தமிழைத் (LANGUAGE-I) தேர்ந்தெடுத்திருந்தால் மட்டுமே-IV (கே.எண்: 91-120) க்கான விடைகளைத் தரவேண்டும்.**

**பத்தியைப் படித்து அதனைத் தொடர்ந்து வரும் வினாக்களுக்குச் சரியான பதிலைத் தேர்ந்தெடுத்து எழுதவும். (கே.எண். 91 - 99)**

கடைச் சங்க காலத்திலே, தமிழகம் ஆறு நாடுகளாகப் பிரிந்திருந்தது. அந்தப் பிரிவுகள், துளு நாடு, சேர நாடு, பாண்டி நாடு, சோழ நாடு, அருவா நாடு, கொங்கு நாடு என்பவை. இந்த ஆறு நாடுகளில் துளு நாடும், சேர நாடும் மேற்குக் கடற்கரையோரத்தில் இருந்தன. துளு நாடு இப்போது தென் கன்னடம், வட கன்னடம் என்று பெயர் பெற்று மைசூர் இராச்சியத்தோடு இணைந்திருக்கின்றது. சேர நாடு இப்போது கேரள நாடு என்று பெயர் பெற்று மலையாளம் பேசும் நாடாக மாறிப் போயிற்று. தமிழகத்தின் தென் கோடியில் பாண்டி நாடு மூன்று கடல்கள் சூழ்ந்த நாடாக இருந்தது. சோழ நாடும், அருவா நாடும் (தொண்டை நாடு) கிழக்குக் கடற்கரையோரமாக அமைந்துள்ளன. கொங்கு நாடு தமிழகத்தின் இடை நடுவே கடற்கரை இல்லாத உள்நாடாக அமைந்திருந்தது. கொங்கு நாடு இப்போது சேலம் வட்டம், கோயம்புத்தூர் வட்டங்களில் அடங்கியிருப்பதாகக் கூறுவர். பிற்காலத்திலே சுருங்கிப்போன கொங்கு நாட்டைத்தான் அதாவது கோயம்புத்தூர், சேலம் வட்டங்களைத்தான், இக்காலத்தில் கொங்கு நாடு என்று கூறுகின்றோம். சங்க காலத்திலிருந்த கொங்கு நாடு இப்போதுள்ள கொங்கு நாட்டை விட மிகப் பெரியதாக இருந்தது. பிற்காலத்துச் செய்யுள்கள் கொங்கு நாட்டின் எல்லையைக் குறுக்கிக் கூறுகின்றன. ஆனால், மிக முற்காலத்திலே, கடைச்சங்க காலத்தில் கொங்கு நாடு பரந்து விரிவாக இருந்தது.

அதன் தெற்கு எல்லைக்கு அப்பால் பாண்டி நாடு இருந்தது. அதன் மேற்கு எல்லை, சையகிரி (மேற்குத் தொடர்ச்சி) மலைகள், மேற்குத் தொடர்ச்சி மலைகளுக்கு மேற்கே சேர நாடும், துளு நாடும் இருந்தன. கொங்கு நாட்டின் கிழக்கு எல்லைக்கப்பால் சோழ நாடும், தொண்டை நாடும் இருந்தன. அதன் வடக்கு எல்லை, மைசூரில் பாய்கிற காவிரியாறு வரையில் இருந்தது.

இவ்வாறு பழங்கொங்கு நாட்டின் பரப்பும், எல்லையும் மிகப் பெரியதாக இருந்தன. இப்போது பாண்டி நாட்டுடன் இணைந்து இருக்கிற வையாவி நாடு (பழனி மலை வட்டாரம்) அக்காலத்தில் கொங்கு நாட்டின் தென்பகுதியாக இருந்தது. பழனி மலை சங்க காலத்தில் பொதினி என்று வழங்கப் பெற்றது. பொதினி பிற்காலத்தில் பழனியாயிற்று. கொங்கு நாட்டின் தென்கோடியாகிய வையாவி நாட்டை அக்காலத்தில் வையாவிக்கோ என்னும் அரச பரம்பரையார் அரசாண்டார்கள். சேர நாடு, துளு நாடுகளின் கிழக்கே, வடக்குத் தெற்காக நீண்டு கிடக்கிற மேற்குத் தொடர்ச்சி மலைகள் கொங்கு நாட்டின் மேற்கு எல்லைகளாக அமைந்திருந்தன. யானைமலைப் பிரதேசம் கொங்கு நாட்டைச் சேர்ந்திருந்தது.

மேற்கு தொடர்ச்சி மலையில் உள்ள பாலைக்காட்டுக் கணவாய், சேர நாட்டையும், கொங்கு நாட்டையும் இணைத்துப் போக்குவரத்துக்கு உதவியாக இருந்தது. மற்ற இடங்களில் மேற்குத் தொடர்ச்சி மலைகள் உயரமாக அமைந்து இரண்டு நாடுகளுக்கும் போக்குவரத்து இல்லாதபடி தடுத்து விட்டன. பாலைக் காட்டுக்கு அருகில் மலைகள் தாழ்ந்து கணவாயாக அமைந்து இருப்பதால் அது சேர நாட்டுக்கும், கொங்கு நாட்டுக்கும் போக்குவரத்துக்கு ஏற்றதாக இருக்கின்றது. இந்தக் கணவாய் வழியாகச் சேர அரசர் படையெடுத்து வந்து கொங்கு நாட்டைக் கைப்பற்றினார்கள்.

www.careerindia.com

CAREERINDIA

**91.** துளு நாடு இப்போது __________ என்றும், __________ என்றும் வழங்கப்படுகிறது, சேர நாடு __________ என்று பெயர் பெற்றுள்ளது.

(1) தென் கன்னடம், வட கன்னடம், கேரள நாடு

(2) தென் கன்னடம், வட கன்னடம், மலையாளம்

(3) கன்னட நாடு, சேர நாடு, கேரளம்

(4) மைசூர், கன்னடம், மலையாளம்

**92.** பழனி மலை __________ என வழங்கப்பட்டது, கொங்கு நாட்டுடன் சேர்ந்திருந்த பிரதேசம் __________.

(1) யானை மலை, பொதினி மலை (2) பாலைக் காடு, யானை மலை

(3) பொதினி, யானை மலை (4) வையாவி நாடு, யானை மலை

**93.** தமிழகம் கடைச் சங்க காலத்தில் __________ பிரிந்திருந்தது, அவற்றில், __________ , __________ இரண்டும் மேற்குக் கடற்கரையோரம் அமைந்திருந்தன.

(1) ஆறு நாடுகளாகப், கொங்கு நாடு, சேர நாடு

(2) ஆறு நாடுகளாகப், துளு நாடு, சேர நாடு

(3) நில அடிப்படையில், சேர நாடு, பாண்டி நாடு

(4) பல நாடுகளாகப், பாண்டி நாடு, சோழ நாடு

**94.** __________ கணவாய் __________ நாட்டுக்கும், __________ நாட்டுக்கும் இடையிலான __________ உதவியாக இருந்தது.

(1) பாலைக் காட்டுக், சேர, கொங்கு, போக்குவரத்துக்கு

(2) பாலைக் காட்டுக், சேர, சோழ, போக்குவரத்துக்கு

(3) மலைதாழ்ந்த, சேர, கொங்கு, போருக்கு

(4) பாலைக் காட்டுக், சேர, துளு, போக்குவரத்துக்கு

**95.** __________ கொங்கு நாடு __________ இருந்தது, அதன் __________ பாண்டிய நாடு இருந்தது.

(1) கடைச் சங்க காலத்தில், பரந்து விரிவாக, மேற்கு எல்லையில்

(2) கடைச் சங்க காலத்தில், பரந்து விரிவாக, தெற்கு எல்லையில்

(3) கடைச் சங்க காலத்தில், உள்நாட்டுப் பகுதியாக, எல்லைக்குள்

(4) கடைச் சங்க காலத்தில், எல்லையாக, மேற்குப் பகுதியில்

**96.** சேலம், __________ பகுதிகளை அடக்கிய __________ கடற்கரையற்ற __________ அமைந்திருந்தது.

(1) கோயம்புத்தூர், கொங்கு நாடு, உள்நாடாக

(2) கோயம்புத்தூர், கொங்கு நாடு, எல்லைப் பகுதியாக

(3) கோயம்புத்தூர், இடை நாடு, எல்லை நாடாக

(4) கோயம்புத்தூர், பாண்டிய நாடு, உள்நாட்டில்

www.careerindia.com

97. தொண்டை நாடு, __________ எனவும் அழைக்கப்பட்டது, __________ தொண்டை நாடும் __________ பகுதியில் அமைந்துள்ளன.
(1) சோழ நாடு, அருவா நாடும், கிழக்குக் கடற்கரைப்
(2) கடல் சூழ்ந்த நாடு, சோழ நாடும், கிழக்குக் கடற்கரைப்
(3) அருவா நாடு, கொங்கு நாடும், உள்நாட்டுப்
(4) அருவா நாடு, சோழ நாடும், கிழக்குக் கடற்கரைப்

98. மேற்குத் தொடர்ச்சி மலைகளுக்கு __________ சேர நாடும் __________ இருந்தன.
(1) மேற்குப் பகுதியில், துளு நாடும்
(2) மேற்கில், கொங்கு நாடும்
(3) கிழக்கில், காவிரியாறும்
(4) கிழக்கில், துளு நாடும்

99. கொங்கு நாட்டின் __________ எல்லையில் __________ தொண்டை நாடும் இருந்தன, அதன் __________ காவிரியாறு வரை இருந்தது.
(1) வடக்கு, சோழ நாடும், தெற்கு எல்லை
(2) கிழக்கு, சேர நாடும், வடக்கு எல்லை
(3) தெற்கு, சோழ நாடும், வடக்கு எல்லை
(4) கிழக்கு, சோழ நாடும், வடக்கு எல்லை

**பாடலைப் படித்து அதனைத் தொடர்ந்து வரும் வினாக்களுக்குச் சரியான பதிலைத் தேர்ந்தெடுத்து எழுதவும். (கே.எண். 100 - 105)**

புனல்சூழ்ந்து வடிந்து போன
நிலத்திலே புதிய நாளை
மனிதப் பைங்கூழ் முளைத்தே
வகுத்தது! மனித வாழ்வை,
இனியநற்றமிழே நீதான்
எழுப்பினை! தமிழன் கண்ட
கனவுதான், இந்நாள் வையக்
கவின்வாழ்வாய் மலர்ந்ததன்றோ ?

இசையினைக் காணு கின்றேன்;
எண் நுட்பம் காணு கின்றேன்
அசைக்கொணாக் கல்தச் சர்கள்
ஆக்கிய பொருள்காண் கின்றேன்;
பசைப்பொருட் பாடல் ஆடல்
பார்க்கின்றேன்; ஓவியங்கள்
நசையுள்ள மருந்து வன்மை
பலபல நான்காண்கின்றேன்.

100. இந்த எதுகைகள், இவ்வகை முறையில், பாடலில் அமைந்துள்ளன :
(1) இசை, அசை, பசை, நசை
(2) இசை, பாடல், ஆடல், வன்மை
(3) நசை, பசை, அசை, இசை
(4) இசை, எண், அசை, ஆக்கிய

101. பாடலில் இடம்பெறும் காட்சிக்குரிய கலைகள் :
(1) பாடல், ஆடல், ஓவியம்
(2) கல்தச்சு, எண்நுட்பம், ஓவியம்
(3) சிற்பம், மருந்து, எண்நுட்பம்
(4) சிற்பம், ஆடல், ஓவியம்

CAREERINDIA

**102.** புதிய நாளை வகுத்த நிகழ்வு :
(1) பசும்பயிர் முளைத்து மனிதராகுதல்
(2) பைங்கூழ் வடிந்து புதியதாகுதல்
(3) மனிதர்கள் பசுமையை வகுத்தல்
(4) மனிதர் என்னும் பசும்பயிர் முளைத்தல்

**103.** பைங்கூழ், நற்றமிழ் - பிரித்தெழுதுக :
(1) பைங் + கூழ், நன் + தமிழ்
(2) பசும் + கூழ், நற் + தமிழ்
(3) பசுமை + கூழ், நல்ல + தமிழ்
(4) பசிய + கூழ், நல் + தமிழ்

**104.** புதிய நாளைக்கு முன்பு நிலத்தில் _________ சூழ்ந்திருந்தது, பிறகு அது _________.
(1) நீர், வடிந்தது
(2) நீர், முளைத்தது
(3) புனல், முளைத்தது
(4) புனல், பெருகியது

**105.** இந்நாள் உலகின் அழகிய வாழ்வு இதிலிருந்து பூத்தது :
(1) தமிழர் பேசிய மொழியிலிருந்து
(2) தமிழர்கள் கண்ட கனவிலிருந்து
(3) தமிழர் என்ற பெயரிலிருந்து
(4) இனிய நற்றமிழின் எழுச்சியிலிருந்து

**106.** 'சொற்பிரயோகம்' என்றால் என்ன ?
(1) வரிகளுக்கு அப்பால் கவனிக்கப்படுகின்ற சொற்கள்
(2) பேசும்போதும், எழுதும்போதும் பயன்படுத்துகின்ற சொற்கள்
(3) வாசிப்பவருக்குப் புதிதாகத் தோன்றும் சொற்கள்
(4) கேட்டவுடன் புரிந்துகொள்கின்ற சொற்கள்

**107.** புரிந்து படித்தலோடு கீழ்க்கண்ட எந்தத் திறன் சரியானது என்று கருதப்படுவதில்லை ?
(1) உள்ளடக்கத்தை எதிர்நோக்குதல்
(2) நிகழ்வுகளையோ அல்லது கருத்துக்களையோ ஒழுங்குபடுத்துதலும், கணித்தலும்
(3) இதுவரைப் படித்த பகுதிகளை மனதளவில் சுருக்குதல்
(4) தனி எழுத்துக்களின் மீது கவனம் செலுத்துதல்

**108.** ஒரு ஆசிரியர் தன் மாணவர்களை நோக்கி அவர் கேட்ட அவர்களின் சொந்த அனுபவம் சார்ந்த கேள்விக்கு விடையளிக்கும்போது என்ன நினைத்தீர்கள், எப்படி நினைத்தீர்கள் என்பதை வெளிப்படுத்துமாறு கேட்கிறார். இந்த எடுத்துக்காட்டு :
(1) உருவகம்
(2) மெட்டா லிங்குவலிஸம்
(3) மெட்டா சிமோடிக்ஸ்
(4) மெட்டா காக்னிஷன்

**109.** கீழ்க்கண்டனவற்றுள் எது இரண்டாம் மொழி கற்பித்தலில் இலக்கண மொழிபெயர்ப்பு கூறு அல்ல ?
(1) இரண்டாம் மொழிக்கான இலக்கண விதிகளை படித்தலும், பயிற்சி செய்தலும்
(2) இரண்டாம் மொழியில் நேரடியாகத் தொடர்பு கொள்ளுதல் பிறகு இரண்டு மொழிகளுக்குமான விதிகளை ஒப்பிடுதல்
(3) மொழிச் செயல்பாட்டை விட மொழி அமைப்பிற்கு முக்கியத்துவம் கொடுத்தல்.
(4) முதல் மற்றும் இரண்டாம் மொழிக்கான இலக்கண விதிகளை ஒப்பிடுதல்

www.careerindia.com

CAREERINDIA

**110.** கீழ்க்கண்ட எந்த மனிதமொழிக் கூறுகளின் காரணமாக மனிதர்கள் உடனடி நேரம், காலம் அல்லாத விடயங்களைப் பற்றிப் பேச முடிகிறது ?

(1) தன்னிச்சையான தன்மை (2) அமைப்புச் சார்பு

(3) தனித் தன்மை (4) இடப்பெயர்ச்சி

**111.** மொழி கையகப்படுத்தும் சாதனம் என்ற கருத்தாக்கத்தால் கீழ்க்கண்டனவற்றுள் எந்த ஒன்று விளக்கப்படவில்லை ?

(1) குழந்தைகள் எவ்வாறு குறைந்தது 4-5 ஆண்டுகளில் மொழியைக் கற்க முடிகிறது.

(2) குழந்தைகள் எவ்வாறு உருவக மொழியைக் கற்கிறார்கள்.

(3) ஏன் குழந்தைகளின் மொழி வெளிப்பாடு தாங்கள் பெறும் தகவல்களை விட அதிகமாக உள்ளது.

(4) குழந்தைகள் எவ்வாறு தாய்மொழி கற்கின்றார்கள்.

**112.** மொழிகள் மற்றும் வட்டார வழக்குகள் பற்றிய கீழ்க்கண்ட கூற்றுகளுள் எது மொழியியல் அடிப்படையில் சரியானது ?

(1) மொழிகளும், வட்டார வழக்குகளும் மொழியியல் அடிப்படையில் வேறுபட்டது. ஆனால் புவியியல் அடிப்படையில் ஒற்றுமையுடையது.

(2) மொழிக்கு என தனித்த எழுத்து வடிவம் உண்டு. வட்டார வழக்குகளுக்கு அது கிடையாது.

(3) மொழிகளுக்கும், வட்டார வழக்குகளுக்குமிடையில் மொழியியல் அடிப்படையில் வரையறுக்கப்பட்ட வேறுபாடுகள் ஏதும் இல்லை.

(4) மொழி எழுதப்பட்ட இலக்கியத்தைக் கொண்டது. வட்டார வழக்குகள் வாய்மொழி வழக்கை அடிப்படையாகக் கொண்டது.

**113.** படித்தல் திறனுக்கு எழுத்துக்களில் தொடங்குவதை விட சொற்களிலும், கதைகளிலும் தொடங்குவது நன்று என்பதை கீழ்க்கண்ட எந்த கூற்று நியாயப்படுத்தவில்லை ?

(1) சொற்களும், உரைப்பகுதிகளும் ஒரு கருத்தை உருவாக்கும். ஆனால், வெறும் எழுத்துக் களால் இது முடியாது.

(2) சொற்களும், உரைப்பகுதிகளும் மிகவும் சுவாரஸ்யமானவை. எழுத்துக்களால் இது முடியாது.

(3) தனித்த எழுத்துக்களை மனனம் செய்வது சொற்களை மனனம் செய்வதைவிட கடின மானது.

(4) முதலில் படிக்கத் தொடங்குபவர்கள் சிறிய தொகுதியைவிட பெரிய தொகுதியில் கவனம் செலுத்துவர்.

**114.** தாய்மொழியை அடிப்படையாகக் கொண்ட பன்மொழிச் சூழல் வலியுறுத்துவது :

(1) எல்லாக் குழந்தைகளுக்கும் முதன்முதலில் பள்ளிக் கல்வியை அந்தந்த மாநில மொழியில் தொடங்குதல்

(2) எல்லாக் குழந்தைகளுக்கும் முதன் முதலில் பள்ளிக் கல்வியை ஆங்கிலத்திலும், தாய் மொழியிலும் தொடங்குதல்

(3) எல்லாக் குழந்தைகளும் இந்தியை முதன்மொழியாகப் படித்தல்

(4) எல்லாக் குழந்தைகளுக்கும் முதன்முதலில் பள்ளிக் கல்வியை தாய்மொழியில் தொடங்குதல்

www.careerindia.com

CAREERINDIA

**115.** கீழ்க்கண்டனவற்றுள் எது கிராஷ்ஹன் கருதுகோளுடன் விகோட்ஸ்கியின் கற்றல் மற்றும் மேம்பாட்டிற்கான கோட்பாட்டோடு ஒத்தது ?

(1) கண்காணிப்பு கருதுகோள்

(2) இயற்கை ஒழுங்கு கருதுகோள்

(3) உணர்தல் வடிகட்டு கருதுகோள்

(4) உள்ளீடு கருதுகோள்

**116.** கம்மின்னின் 'ஒன்றுக்கொன்று' சார்ந்த கருதுகோளின்படி கீழ்க்கண்டனவற்றுள் எது ஒன்றோடொன்று சார்ந்தது ?

(1) முதல், இரண்டாம் மொழிகளில் புரிதல் சார்ந்த வல்லமை

(2) இரண்டாம் மொழியைப் படித்தலும், எழுதுதலும்

(3) முதல், இரண்டாம் மொழிகளில் அடிப்படையான தனித்த திறன்கள்

(4) இரண்டாம் மொழியைப் புரிந்து கொள்ளுதலும், வெளிப்படுத்துதலும்

**117.** கீழ்க்கண்டனவற்றுள் எது புரிந்து படித்தல் உத்தி தொடர்பான தவறான கூற்று ?

(1) மேலோட்டம் ஊன்றிப் படிப்பது. ஆழ்தல் விரைவாகப் படிப்பது.

(2) மேலோட்டம் மீள்வாசிப்பிற்குப்பொருத்தமானது. ஆழ்தல் குறிப்பிட்ட ஒரு கேள்விக்கு பதிலளிக்க உதவுகிறது.

(3) மேலோட்டமாகப் படிப்பதற்கும், ஆழ்ந்து படிப்பதற்கும் உரைகளின் மீதான விரைவான கண்ணோட்டம் தேவைப்படுகிறது.

(4) மேலோட்டம் என்பது விரைவாகப் படிப்பது. ஆழ்தல் என்பது குறிப்பிட்ட ஒன்றை கருத்தூன்றிப் படிப்பது.

**118.** குழந்தைகள் மொழியைப் பயன்படுத்தி தம்மைச் சூழ்ந்துள்ள ஏதேனும் ஒரு பொருளையோ, நிகழ்வையோ கேட்கும்போது கீழ்க்கண்ட எந்த மொழிப்பயன்பாடு மற்றவர்களைவிட அதிகமாகப் பயன்படுகிறது ?

(1) ஒழுங்கு (2) தகவல் (3) ஹெருஸ்டிக் (4) கற்பனை

**119.** ஒரு பேச்சுக்குழுவில் S என்பது இருவேறுபட்ட சமூகப் பொருளாதார பின்புலம் கொண்ட மக்களால் வேறு வேறு விதமாக உச்சரிக்கப்படுகிறது. இந்த எடுத்துக்காட்டு :

(1) ஒரு நடைமுறை சார்ந்த மாறி (2) ஒரு சமூகக் கலாச்சார மாறி

(3) ஒரு சமூக உளவியல் மாறி (4) ஒரு சமூக மொழியியல் மாறி

**120.** வீரா ஒரு ஏழு மாதக் குழந்தை. அக்குழந்தை உயிர், மெய் எழுத்துக்களைச் சேர்த்துப் பேச குரல் எழுப்புகிறது. அக்குழந்தை தொடர்புகொள்ள முற்படுவது கீழ்க்கண்டனவற்றுள் எதில் அடங்கும் ?

(1) தெளிவற்ற பேச்சு (2) கூலிங்

(3) மொழியியல் பேச்சு (4) ஒலிக் குறிப்புகள்

www.careerindia.com

CAREERINDIA

தேர்வு எழுதுவோர் **தமிழைத், தமிழ்-II** மொழியாக தேர்ந்தெடுத்திருந்தால் மட்டுமே **பகுதி-V (கே.எண்: 121 - 150)** -க்கான விடைகளைத் தர வேண்டும்.

Candidates should attempt the questions from **Part-V (Q.No. 121-150)**, if they have opted <u>**TAMIL**</u> as **Language-II** only.

→

www.careerindia.com

CAREERINDIA

## PART–V

## LANGUAGE–II

## தமிழ்

**பகுதித் தேர்வு எழுதுவோர் தமிழைத் (LANGUAGE-II) தேர்ந்தெடுத்திருந்தால் மட்டுமே–V (கே.எண்: 121-150) க்கான விடைகளைத் தரவேண்டும்.**

**பத்தியைப் படித்து அதனைத் தொடர்ந்து வரும் வினாக்களுக்குச் சரியான பதிலைத் தேர்ந்தெடுத்து எழுதவும். (கே.எண். 121 - 128)**

ஒலி, சொல், வாக்கியம் ஆகிய மூன்று கூறுகளைக் கொண்டது மொழி. ஒலிக்குத் தரும் குறியீடு எழுத்து, சொல் உணர்த்துவது பொருள். வாக்கியம் உணர்த்துவது விரிவான பொருள். அவ் வகையில் அர்த்தம் அல்லது பொருள் சொல்லோடும், வாக்கியத்தோடும் தொடர்புடையது. ஒவ்வொரு மொழியும் தனக்கென்று தனியான மொழியமைப்பைக் கொண்டுள்ளது. மொழி அமைப்பில் மொழிகளுக்கு இடையில் ஒற்றுமைக் கூறுகளும், வேற்றுமைக் கூறுகளும் உள்ளன.

மொழிக்கு அடிப்படை ஒலியாகும். ஒலியைத் தோற்றுவிப்பன நம் உடல் உறுப்புகளே. அவற்றைப் பேச்சுறுப்புகள் அல்லது ஒலி உறுப்புகள் என்று குறிப்பிடுவோம். உதடு, பல், அண்ணம், உள்நாக்கு, காற்றுக் குழல், குரல்வளை, தொண்டை போன்ற உறுப்புகள் ஒலியைத் தோற்றுவிக்கின்றன. இன்ன ஒலியுறுப்பு இன்ன முறையில் இயங்குவதால் இன்ன ஒலி பிறக்கிறது என்று விளக்குவது ஒலியியலாகும். நுரையீரலில் இருந்து வெளிப்படும் காற்று ஒலி உறுப்புகளால் எவ்வகைத் தடையும் இன்றி வெளிவரும்போது உண்டாகும் ஒலி உயிரொலி எனப்படும். ஒலி உறுப்புகளால் தடுத்து வெளிப்படல், உரசுதல் போன்றவை நிகழ்ந்தால் அது மெய்யொலி எனப்படும். அவ்வகையில் தமிழில் பேச்சொலிகள் உயிரொலி, மெய்யொலி என்று இரண்டாக அமைந்துள்ளன.

ஒலிக்கு வடிவம் தரும்போது உருவானது எழுத்து. எழுத்து முதலொலியை ஒட்டியே அமையும். ஆகையால் ஒரு மொழியின் எழுத்துகளைக் கொண்டு மற்றொரு மொழியை எழுதும் போது தடங்கல் தோன்றுகிறது. இதைத் தவிர்க்க உலக ஒலி எழுத்து என்ற முறை உருவாக்கப் பட்டது. பிறமொழிகளை எழுதும்போது உலக ஒலி எழுத்து முறையைப் பின்பற்றி எழுதும் முறை உலகெங்கும் பின்பற்றப்படுகிறது. தமிழர் ஒலிகளை அளவுக்கு உட்படுத்திப் பிரித்தனர். மாத்திரை என்பது ஒலிப்பு அளவைக் குறிக்கும். ஒலிக்கும் அளவு ஒன்று என்றாலும், ஒலிக்கும் முறை மனிதருக்கு மனிதர் வேறுபடுகிறது. ஒரு மனிதரது குரல் மற்றொரு மனிதரது குரலிலிருந்து வேறு படுவதற்கு ஒலிப்பு முறை வேறுபாடும் ஒரு காரணமாகும். உச்சரிப்பைப் பயிற்றுவிக்கும் அகராதிகள் உள்ளன, பயிற்சி முறைகள் உள்ளன.

**121.** ஒலிப்பு அளவு தமிழில் __________ எனப்படுகிறது, __________ ஒவ்வொருவருக்கும் ஒன்று பட்டாலும் __________ வேறுபடுகிறது.

(1) மாத்திரை, ஒலிக்கும் அளவு, ஒலிக்கும் முறை
(2) உயிரொலி, ஒலிக்கும் அளவு, ஒலிக்கும் முறை
(3) மாத்திரை, ஒலிக்கும் முறை, ஒலிக்கும் அளவு
(4) ஒலியியல், ஒலிக்கும் அளவு, ஒலிக்கும் முறை



www.careerindia.com

122. காற்று __________ வெளிப்பட்டு __________ தடைப்படாமல் வெளிப்படும்போது __________ உண்டாகிறது.

(1) நுரையீரலிலிருந்து, ஒலியுறுப்புகளால், உயிரொலி

(2) நுரையீரலிலிருந்து, ஒலியுறுப்புகளால், மெய்யொலி

(3) நுரையீரலிலிருந்து, ஒலிப்புத், உயிர்மெய்

(4) நுரையீரலிலிருந்து, அழுத்தம், உயிரொலிப்பு

123. __________ என்பது ஒலிக்கான __________; பொருளை __________ சொல்; வாக்கியம் __________ உணர்த்துவது.

(1) எழுத்து, குறியீடு, உணர்த்துவது, விரிவான பொருளை

(2) எழுத்து, பொருள், விளக்குவது, விரிவான பொருள்

(3) எழுத்து, விளக்கம், உணர்த்துவது, விரிவான பொருளை

(4) சொல், குறியீடு, உணர்த்துவது, குறியீடாக

124. மொழிக்கு அடிப்படையான __________ தோற்றுவிப்பவை __________, அவை __________ அல்லது __________ எனப்படுகின்றன.

(1) பொருளைத், உடல் உறுப்புகள், பேச்சுறுப்புகள், ஒலி உறுப்புகள்

(2) ஒலியைத், உடல் உறுப்புகள், பேச்சுறுப்புகள், ஒலி உறுப்புகள்

(3) ஒலியைத், உடல் உறுப்புகள், பேச்சுறுப்புகள், செயலுறுப்புகள்

(4) எழுத்தைத், உடல் உறுப்புகள், பேச்சுறுப்புகள், ஒலி உறுப்புகள்

125. __________ வடிவம் தரும் __________ முதலொலியை __________ அமைவதால், ஒரு மொழியின் எழுத்துக்களைக் கொண்டு மற்றொரு மொழியை எழுதுவதில் __________ ஏற்படுகிறது.

(1) உயிரொலிக்கு, மெய்யெழுத்து, ஒட்டி, தடங்கல்

(2) ஒலிக்கு, எழுத்து, ஒட்டி, தடங்கல்

(3) மொழிக்கு, எழுத்து, அடுத்து, உறவு

(4) ஒலிக்கு, எழுத்து, உள்ளடக்கி, தடங்கல்

126. மொழிகளுக்கு இடையில் __________ கூறுகளும், __________ கூறுகளும் __________ உள்ளன.

(1) ஒற்றுமைக், உருவக், ஒலி அமைப்பில்

(2) எழுத்துக், ஒலிப்புக், மொழி அளவில்

(3) தனித்த, கலந்த, மொழி அமைப்பில்

(4) ஒற்றுமைக், வேற்றுமைக், மொழி அமைப்பில்

**127.** __________ முறையின் நோக்கம் ஒரு மொழியை __________ எழுத்தில் எழுதும்போது ஏற்படும் __________ நீக்குவது.

(1) உலக ஒலி எழுத்து, மற்றமொழி, தடங்கலை
(2) உலகப் பொது, மற்றமொழி, உறவை
(3) உலக ஒலி எழுத்து, இரண்டு வகை, தடையை
(4) உலக ஒலி எழுத்து, மற்றமொழி, இணைப்பை

**128.** ஒரு குறிப்பிட்ட __________, ஓர் __________ இயங்கும் முறையை __________ விளக்குகிறது.

(1) மொழி பிறக்க, ஒலியுறுப்பு, ஒலியியல்
(2) எழுத்து பிறக்க, ஒலியுறுப்பு, ஒலியியல்
(3) ஒலி பிறக்க, ஒலியுறுப்பு, ஒலியியல்
(4) சொல் பிறக்க, உடலுறுப்பு, ஒலியியல்

**பத்தியைப் படித்து அதனைத் தொடர்ந்து வரும் வினாக்களுக்குச் சரியான பதிலைத் தேர்ந்தெடுத்து எழுதவும். (கே.எண். 129 - 135)**

புதினம் தமிழிலக்கியத்திற்குக் கிடைத்த புதிய வரவு, மேலை நாட்டினர் தொடர்பால் தமிழ் மொழி அடைந்த நன்மைகளில் இதுவும் ஒன்று. பத்தொன்பதாம் நூற்றாண்டின் இறுதியில் தோன்றிய புதின இலக்கியம், இருபதாம் நூற்றாண்டில் பெரும் வளர்ச்சியைக் கண்டது. புதினங்களைத் துப்பறியும் புதினங்கள், சமூகப் புதினங்கள், வரலாற்றுப் புதினங்கள், அறிவியல் புதினங்கள், வட்டாரப் புதினங்கள், மொழிபெயர்ப்புப் புதினங்கள், தழுவல் புதினங்கள் என ஆறு வகையாகப் பிரித்தறியலாம். தனிமனிதனுக்கும், சமுதாயத்துக்கும் உள்ள உறவைப் புதினங்கள் எடுத்துக்காட்டுகின்றன. வாழ்வு எங்கே, சந்திப்பு போன்ற அகிலனின் புதினங்கள் சாதிக்கொடுமைகளைச் சுட்டிக்காட்டுகின்றன. ரகுநாதனின் பஞ்சும் பசியும் கைத்தறி நெசவாளர் பட்ட கொடுமைகளை எதார்த்த முறையில் சித்தரிக்கும் நாவல். இந்த நாவல் தந்த உந்துதலால் பல்வேறு வகையிலும் ஒடுக்கப்பட்ட பிரிவினராகிய ஏழைகள், மலைவாழ் மக்கள், மீனவர்கள், பெண்கள் போன்றோர் பற்றிய பல நாவல்கள் தமிழில் வெளிவந்தன. அநுத்தமா, மணல் வீடு, ஒரே வார்த்தை, கேட்ட வரம் போன்ற புதினங்களை எழுதியுள்ளார். தமிழ் நாவலாசிரியர்களில் தன் கருத்தைப் பாத்திரங்களின் மொழியில் வெளிப்படுத்தக் கூடிய ஆற்றல் மிக்க ஒரு எழுத்தாளர் ஜெயகாந்தன். விடுதலைக்குப் பின்னர் முதலாளித்துவம் வளரத் தொடங்கியது. இந்த நிலையில் தோன்றியுள்ள சமுதாயக் கொடுமைகள், சமுதாயப் பிரச்சினைகள் பல. பொன்னீலன் எழுதிய கரிசல் என்ற புதினம் கிராமத்தின் பஞ்சாயத்துத் தலைவர் கேட்பாரற்ற அதிகாரத்துடன் தம்முடைய நிலத்தில் உழைக்கிற மக்களுக்குப் போதிய கூலி கொடுக்காமல் வதைத்து, அடக்கு முறையைக் கையாளும் பொழுது, கிராம மக்கள் விழிப்படைந்து உரிமைக் குரல் கொடுப்பதைக் கதைப் பொருளாகக் கொண்டது.

**129.** தமிழிலக்கியத்திற்கு __________ புதிதாக வந்த இலக்கிய __________ மேலைநாட்டுத் தொடர்பால் __________ அடைந்த __________ ஒன்று.

(1) புதினம், வளர்ச்சி, நன்மை, வடிவங்களில்
(2) புதினம், கோட்பாடு, தமிழ்மொழி, நன்மைகளில்
(3) புதினம், வடிவம், தமிழ்மொழி, நன்மைகளில்
(4) புதினம், வடிவம், இலக்கியம், முறைகளில்

www.careerindia.com

CAREERINDIA

**130.** __________ புதினங்கள், __________ புதினங்கள், __________ புதினங்கள், __________ புதினங்கள், வட்டாரப் புதினங்கள் தமிழில் நேரடியாக, பிறமொழித் தொடர்பின்றி எழுதப் படுபவை.

(1) துப்பறியும், சமூகப், வரலாற்றுப், அறிவியல்

(2) மொழிபெயர்ப்புப், தழுவல், வரலாற்றுப், அறிவியல்

(3) துப்பறியும், வாழ்க்கைப், வரலாற்றுப், தழுவல்

(4) துப்பறியும், அரசியல், திரைக்கதைப், வரலாற்றுப்

**131.** __________ தன் __________, வழியாகத் தன் __________ வெளிப்படுத்திய எழுத்தாளர் என இங்குக் குறிப்பிடப்படுகிறார்.

(1) ரகுநாதன், பாத்திரங்கள், கருத்தை

(2) ஜெயகாந்தன், பாத்திரங்களின் மொழி, கருத்தை

(3) ஜெயகாந்தன், புதினங்கள், கருத்தை

(4) அகிலன், பாத்திரங்கள், கருத்தை

**132.** __________ எழுதிய __________ நிலத்தில் __________ தம்முடைய __________ குரல் கொடுப்பதைக் கதைப் பொருளாகக் கொண்டுள்ளது.

(1) பொன்னீலன், கரிசல், உழைக்கும் மக்கள், உரிமைக்குக்

(2) பொன்னீலன், பஞ்சும் பசியும், உழைக்கும் மக்கள், உரிமைக்குக்

(3) பொன்னீலன், மணல் வீடு, உழைக்கும் மக்கள், அதிகாரத்துக்குக்

(4) ஜெயகாந்தன், கரிசல், உழைக்கும் மக்கள், உரிமைக்குக்

**133.** சாதிக் கொடுமைகளைச் சுட்டிக் காட்டும் __________ இரண்டு புதினங்கள் __________, __________ ரகுநாதனின் __________ கைத்தறி நெசவாளர் வாழ்வின் கொடுமைகளைச் சொல்வது.

(1) அகிலனின், வாழ்வு எங்கே, சந்திப்பு, பஞ்சும் பசியும்

(2) அகிலனின், பஞ்சும் பசியும், வாழ்வு எங்கே, சந்திப்பு

(3) ஜெயகாந்தனின், வாழ்வு எங்கே, சந்திப்பு, பஞ்சும் பசியும்

(4) அநுத்தமாவின், வாழ்வு எங்கே, சந்திப்பு, பஞ்சும் பசியும்

**134.** __________, __________, மீனவர்கள் போன்ற __________ மக்களின் வாழ்க்கை பற்றிய நாவல்கள் வெளிவர உந்துதலாக அமைந்தது __________.

(1) நெசவாளர்கள், மலைவாழ் மக்கள், ஒடுக்கப்பட்ட, வாழ்வு எங்கே

(2) ஏழைகள், மலைவாழ் மக்கள், சிறுபான்மை, மணல் வீடு

(3) ஏழைகள், மலைவாழ் மக்கள், வீடற்ற, பஞ்சும் பசியும்

(4) ஏழைகள், மலைவாழ் மக்கள், ஒடுக்கப்பட்ட, பஞ்சும் பசியும்

www.careerindia.com

**135.** __________, __________, கேட்ட வரம் புதினங்களை எழுதியவர் _________.

(1) மணல் வீடு, ஒரே வார்த்தை, அகிலன்

(2) வாழ்வு எங்கே, மணல் வீடு, அகிலன்

(3) மணல் வீடு, ஒரே வார்த்தை, அநுத்தமா

(4) வாழ்வு எங்கே, சந்திப்பு, அநுத்தமா

**136.** கீழ்கண்டனவற்றுள் எது மதிப்பீடு குறித்த சரியான கூற்று அல்ல ?

(1) மாணவர்களின் கற்றல் திறனைப் பற்றி ஒரு திடமான சான்றை வழங்குகிறது.

(2) மாணவர்களின் வேகமான முன்னேற்றத்தை பற்றி அறிய உதவுகிறது.

(3) இது ஆசிரியரால் மட்டுமே முடியும்

(4) மாணவர்களின் கற்றல் முன்னேற்றத்தை ஒட்டுமொத்தமாக வழங்குகிறது.

**137.** பன்மொழிக் கலாச்சாரத்தையும், பன்மொழிச் சூழலையும் பரப்ப எந்த வகையான கதை வகைமை மிகவும் பொருத்தமானது ?

(1) சுயசரிதை (2) அறிவியல் கதைகள்

(3) நெடுங்கதை (4) நாட்டுப்புறக் கதைகள்

**138.** கீழே கொடுக்கப்பட்டுள்ளனவற்றுள் எது ஸ்டீபன் கிராஷ்ஹனால் வழங்கப்பட்ட கண்காணிப்பு கருதுகோள் தொடர்பான உண்மை அல்ல ?

(1) இது இயல்பாகக் கற்றல், படித்தல் என இவ்விரண்டிற்கும் இடையிலான உறவின் அடிப்படையில் தொடர்புடையது.

(2) என்ன படிக்கப்பட்டது என்பதைக் கண்காணிக்க இயல்பாகக் கற்றல் உதவுகிறது.

(3) போதுமான விதிகளைப் பற்றிய அறிவையும், போதுமான நேரத்தையும் கற்போர் மட்டுமே கண்காணிக்க முடியும்.

(4) இது இரண்டாம் மொழியை இயல்பாகக் கற்றல் சூழலில் பயன்படுகிறது.

**139.** சொற்களஞ்சியப் பெருக்கத்திற்கும், உரை புரிதலுக்கும் கீழ்க்கண்டனவற்றுள் எது உதவுவது இல்லை ?

(1) நெடுங்கணக்கு உரைபடம் (2) நுதல்பொருள் (theme) படம்

(3) பட அகராதிகள் (4) சொற்படம்

**140.** கீழே கொடுக்கப்பட்டுள்ளனவற்றுள் எது குழந்தை இலக்கியத்திற்கான விரும்பத்தக்க கூறு அல்ல ?

(1) அதிகமான நல்லொழுக்க நன்னடத்தை விதிகள்

(2) பெரிய எழுத்துரு மற்றும் தெரிந்த வார்த்தைகள்

(3) ஈர்க்கும் படங்கள்

(4) விலங்குகள் பாத்திரம்



CAREERINDIA
www.careerindia.com

CAREERINDIA

**141.** கீழே கொடுக்கப்பட்டுள்ள இரண்டு வகையான மதிப்பீட்டு முறைகளில் எது சரியானது ?

(1) தொகுநிலை மதிப்பீடு என்பது ஆண்டின் எல்லா விதமான மதிப்பீட்டின் கூடுதல்

(2) வளர்நிலை மதிப்பீடு கற்றலின் நிலைகளை தொடர்ந்து மதிப்பிடுகிறது.

(3) தொகுநிலை மதிப்பீடு கற்றலின் முன்னும், கற்றலின் போதும் செய்யப்படுகிறது.

(4) வளர்நிலை மதிப்பீடு மொழியின் செயல்பாட்டைவிட அதன் வடிவத்திற்கு முக்கியத் துவம் கொடுக்கிறது.

**142.** கீழ்க்கண்டனவற்றுள் எது தொடர்பாடல் அணுகுமுறையின் ஒரு கூறு அல்ல ?

(1) சூழ்நிலையில் மொழியைப் பயன்படுத்துதல்

(2) விளக்கமாகக் கற்பித்தலைவிட இலக்கண விதிகளைக் கண்டறிதல்

(3) தொடர்பாடலுக்கான நம்பிக்கையை வளர்த்தல்

(4) செயலைவிட வடிவத்திற்கு அதிக முக்கியத்துவம் கொடுத்தல்

**143.** இந்தி பேசும் மாணவர்களுக்கு ஆங்கிலத்தை இரண்டாம் மொழியாகக் கற்பிக்கும் ஆசிரியர் ஒருவர் விதிகளை ஏதும் கூறாமல் அவர்களுக்கு ஆங்கிலத்தில் சிறிது உரையாடும் வாய்ப்பையும், சூழலையும் வழங்குகிறார். உரையாடலில் பயன்படுத்த சில உதாரணங்களை யும் கொடுக்கிறார். மாணவர்கள் அதிலிருந்து தானாகவே ஆசிரியரின் உதவியோடு விதிகளைக் கண்டறிகின்றனர். இதில் ஆசிரியர் கீழ்க்கண்டனவற்றுள் எந்த அணுகுமுறையை கையாள்கிறார் ?

(1) ஒலி-ஊடக அணுகுமுறை

(2) தொடர்பு அணுகுமுறை

(3) நேரடி அணுகுமுறை

(4) இலக்கண மொழிபெயர்ப்பு அணுகுமுறை

**144.** குறிப்பிட்டதொரு உரைப்பகுதியை தொடக்க நிலையில் படிப்பவர் தன்னுடைய கலாச்சாரக் கூறுகள், கருத்து இவை பற்றிய பொது அறிவைப் பயன்படுத்துவது :

(1) மேல் - மேல் அணுகுமுறை

(2) கீழ் - மேல் அணுகுமுறை

(3) கீழ் - கீழ் அணுகுமுறை

(4) மேல் - கீழ் அணுகுமுறை

**145.** கீழ்க்கண்டனவற்றுள் எது கற்றலின் முக்கியமான களம் அல்ல ?

(1) சமூகப் பொருளாதாரம் (2) உணர்தல்

(3) செயல் (4) புரிதல்

www.careerindia.com

CAREERINDIA

**146.** பாதுகாப்பாக உணரும் கற்றல் சூழலை அல்லது மதிக்கப்படும் கற்றல் சூழலை உருவாக்க கீழ்க்கண்ட எது ஒன்று உதவாது ?

(1) குழு இடுபணி அளித்தல்

(2) பன்மொழி அணுகுமுறையை கையாளுதல்

(3) சில மாணவர்களைக் கொண்டு வகுப்பறையைக் கண்காணித்தல்

(4) சகமாணவர்களுடன் உரையாடுதல் மற்றும் மின்னூட்டம் அளித்தல்

**147.** கீழ்க்கண்டனவற்றுள் எது வளர்நிலை மதிப்பீட்டிற்கான உதாரணம் அல்ல ?

(1) ஆண்டின் இறுதியில் பருவத்தேர்வு

(2) ஆண்டு முழுவதும் பத்தியைப் படித்து, புரிந்து விடையளித்தல் மற்றும் சிறிய அளவிலான இடுபணிகள்

(3) ஆண்டு முழுவதும் சிறிய அளவிலான தேர்வு மற்றும் மீள் சரிபார்ப்பு என மதிப்பீட்டுத் திட்டங்கள்

(4) ஆண்டு முழுவதும் தொடர்ச்சியான வாய்மொழித் தேர்வு, எழுதுதல் தேர்வு, பங்கேற்றல் போன்ற இடுபணி

**148.** கற்றலில் விலக்கலை அறிய பிழை ஆய்வு முக்கியமானது. ஏனென்றால் _________.

(1) பிழைகள் என்பது கற்றல் படிநிலையின் சாளரங்கள்.

(2) பிழைகள், கற்போரின் புரிந்து கொள்ளாமையை காட்டுகின்றன.

(3) பிழைகள் கருத்துருவாக்கத்தையும், நோக்கத்தையும் காட்டுகின்றன.

(4) கற்போரின் பொறுப்பற்ற நடத்தையினால் பெரும்பான்மையான பிழைகள் ஏற்படுகின்றன.

**149.** 'p' -யை 'b' எனவும், '6' -யை '9' எனவும் படித்தலும், எழுதுதலும் பொதுவாகக் குழந்தைகள் செய்யும் தவறு என்பது :

(1) அபாசியா (2) அனோமியா (3) டைலெக்சியா (4) ஸ்டட்டர்ஸ்

**150.** அடிப்படையான ஒருவருக்கொருவர் தொடர்பு திறன் என்று அறியப்படுவது :

(1) மொழித்தடை

(2) அன்றாட வாழ்வில் மொழிப் பயன்பாடு

(3) இண்டர் லாங்குவேஜ்

(4) உயரடுக்கு மொழித்திறன்

www.careerindia.com

- o 0 o -

SPACE FOR ROUGH WORK

www.careerindia.com

CAREERINDIA

**: கீழ்வரும் வழிகாட்டுதல் குறிப்புகளைக் கவனமாகப் படிக்கவும் :**

1. கேள்விகளுக்கு விடையளிக்கும் முன் தேர்வு நூற்கட்டில் உள்ள விளக்கங்களைக் கவனமாகப் படிக்கவும், விடையளிக்க வேண்டிய வேறுபட்ட முறைகள் அதில் விளக்கப்பட்டுள்ளன.
2. ஓ.எம்.ஆர். (OMR) விடைத்தாளில் **பக்கம் 2**-ல் உள்ள ஒவ்வொரு வினாவிற்கும் உரிய நான்கு விடைகளில் மிகச் சரியான ஒரு விடையை மட்டும் **நீலம்/கருப்பு பந்துருள்முனைப் பேனா**வினால் முழுவதுமாக மைபட்டை தீட்டப்பட வேண்டும். குறியீடு செய்யப்பட்ட விடையை மாற்ற இயலாது.
3. தேர்வு எழுதுபவர் அவர்தம் விடைத்தாள் மடிந்திருக்கவில்லை என்பதை உறுதி செய்து கொள்ள வேண்டும். விடைத்தாளில் எவ்விதமான அடித்தல் திருத்தலும் செய்தல் கூடாது. விடைத்தாளில் உரிய இடத்தில் மட்டுமின்றிப் பிற எங்கும் தேர்வு வரிசை எண்ணைக் குறிப்பிடக் கூடாது.
4. எச்சூழ்நிலையிலும் (தேர்வு நூற்கட்டு சங்கேதக் குறியீடு/எண்ணும் தேர்வு விடைத்தாள் குறியீடு/எண்ணும் தம்முள் முரண்படும் நிலையில் மட்டுமன்றி) தேர்வு எழுதுபவருக்கு வேறொரு விடைத்தாள் இணை அளிக்கப்படாது. ஆகவே தேர்வு நூற்கட்டையும் விடைத்தாளையும் தேர்வு எழுதுபவர் மிகவும் கவனமாகக் கையாள வேண்டும்.
5. தேர்வு எழுதுபவர் தேர்வு வருகைத் தாளில் அவருக்கு அளிக்கப்பட்டுள்ள தேர்வு நூற்கட்டு மற்றும் விடைத்தாள் குறியீடு மற்றும் எண்களை சரியாகப் பதிவு செய்ய வேண்டும்.
6. ஓ.எம்.ஆர். விடைத்தாளில் உள்ள தகவல்களை ஒரு இயந்திரம் மதிப்பிட உள்ளது. அதனால் தகவல் எதுவும் விடுபடாமல் இருப்பதும் அனுமதி அட்டையில் தரப்பட்டிருப்பதிலிருந்து மாறுபடாமல் இருப்பதும் அவசியம்.
7. தேர்வு எழுத அனுமதி அட்டை தவிர மற்றபடி அச்சு/கையெழுத்துக் குறிப்புகள், துணுக்குகள், பேஜர், செல்போன், மின்சாதனம் எதனையும் தேர்வுக் கூடத்திற்குள் தேர்வு எழுதுவோர் கொண்டு செல்லக் கூடாது.
8. தேர்வு அறைக்குள் அலைபேசி கருவிகள், தொலைத்தொடர்புக் கருவிகள் (செயல் நிறுத்தப்பட்ட நிலையில் கூட) மற்றும் தடை செய்யப்பட்ட பொருள்கள் எதுவும் கொண்டு வரப்படக் கூடாது. இதனைக் கடைபிடிக்காத தேர்வு எழுதுவோர் முறைமீறியவராக கொள்ளப்பட்டு தேர்விலிருந்து தகுதி நீக்கம் செய்யப்படுவது உட்பட பிற நடவடிக்கை களுக்கு உள்ளாக நேரும்.
9. தேர்வு மேற்பார்வையாளர் வினவும் போது தேர்வு எழுதுபவர் தம் அனுமதி அட்டையைக் காண்பிக்க வேண்டும்.
10. தேர்வு இடக் கண்காணிப்பாளர்/தேர்வு மேற்பார்வையாளர் சிறப்பு அனுமதியின்றித் தேர்வு எழுதுபவர் தம் இருக்கையிலிருந்து வெளியேறக் கூடாது.
11. தேர்வு மையத்திற்குள் நுழைதல், தேர்வு மையத்திலிருந்து வெளியேறுதல் ஆகிய இரு வேளையிலும் தேர்வு வருகைப் பதிவுத் தாளில் கையொப்பம் இடாமலும், விடைத்தாளை மேற்பார்வையாளரிடம் திருப்பி அளிக்காமலும் வெளியேறக் கூடாது. வெளியேறுகையில் வருகைப் பதிவுத் தாளில் கையொப்பம் இடாத தேர்வு எழுதுபவரின் விடைத்தாள் திருப்பி அளிக்கப்படாததாகக் கருதப்படும். இந்த முறை மீறிய செயலுக்கு உரிய எதிர்வினை மேற்கொள்ளப்படும். **மேலும், தேர்வர்கள் தங்களது இடது பெருவிரல் அடையாளத்தை வருகைப் பதிவுத் தாளில், ஒதுக்கப்பட்டுள்ள இடத்தில் பதிவு செய்யவேண்டும்.**
12. மின் இயங்கு/மின் இயங்காக் கணிப்பான்களுக்கு அனுமதி இல்லை.
13. தேர்வு ஆணையத்தின் அனைத்து விதமான நடத்தை விதிமுறைகளுக்கும் தேர்வு எழுதுபவர் கட்டுப்படுவது கட்டாயம். முறை மீறிய செயல்கள் மீது தேர்வாணையத்தின் விதிமுறைகள் படி நடவடிக்கை எடுக்கப்படும்.
14. எச்சூழலிலும் தேர்வு நூற்கட்டும் விடைத்தாளும் தனித்தனியே பிரிக்கப்படக் கூடாது.
15. **தேர்வு எழுதி முடித்தபின் தேர்வு எழுதுபவர் தம் விடைத்தாளை மேற்பார்வையாளரிடம் திருப்பி அளிக்க வேண்டும். தேர்வு எழுதுவோர் இத்தேர்வு நூற்கட்டை உடன் எடுத்துச் செல்ல அனுமதிக்கப்படுவர்.**

www.careerindia.com

CAREERINDIA

## निम्नलिखित निर्देशों को ध्यान से पढ़ें :

1. जिस प्रकार से विभिन्न प्रश्नों के उत्तर दिए जाने हैं उसका वर्णन परीक्षा पुस्तिका में किया गया है, जिसे आप प्रश्नों का उत्तर देने से पहले ध्यान से पढ़ लें।
2. प्रत्येक प्रश्न के लिए दिए गए चार विकल्पों में से सही उत्तर के लिए OMR उत्तर पत्र के **पृष्ठ-2** पर केवल एक वृत्त को ही पूरी तरह **नीले/काले बॉल पॉइन्ट पेन** से भरें। एक बार उत्तर अंकित करने के बाद उसे बदला नहीं जा सकता है।
3. परीक्षार्थी सुनिश्चित करें कि इस OMR उत्तर पत्र को मोड़ा न जाए एवं उस पर कोई अन्य निशान न लगाएँ। परीक्षार्थी अपना अनुक्रमांक OMR उत्तर-पत्र में निर्धारित स्थान के अतिरिक्त अन्यत्र न लिखें।
4. परीक्षा पुस्तिका एवं OMR उत्तर पत्र का ध्यानपूर्वक प्रयोग करें, क्योंकि किसी भी परिस्थिति में (केवल परीक्षा पुस्तिका एवं OMR उत्तर पत्र के कोड या संख्या में भिन्नता की स्थिति को छोड़कर) दूसरी परीक्षा पुस्तिका उपलब्ध नहीं करायी जाएगी।
5. परीक्षा पुस्तिका/OMR उत्तर पत्र में दिए गए परीक्षा पुस्तिका कोड व संख्या को परीक्षार्थी सही तरीके से उपस्थिति-पत्र में लिखें।
6. OMR उत्तर पत्र में कोडित जानकारी को एक मशीन पढ़ेगी। इसलिए कोई भी सूचना अधूरी न छोड़ें और यह प्रवेश-पत्र में दी गई सूचना से भिन्न नहीं होनी चाहिए।
7. परीक्षार्थी द्वारा परीक्षा हॉल/कक्ष में प्रवेश-पत्र के सिवाय किसी प्रकार की पाठ्य-सामग्री, मुद्रित या हस्तलिखित, कागज़ की पर्चियाँ, पेजर, मोबाइल फोन, इलेक्ट्रॉनिक उपकरण या किसी अन्य प्रकार की सामग्री को ले जाने या उपयोग करने की अनुमति नहीं है।
8. मोबाइल फोन, बेतार संचार युक्तियाँ (स्विच ऑफ अवस्था में भी) और अन्य प्रतिबंधित वस्तुएँ परीक्षा हॉल/कक्ष में नहीं लाई जानी चाहिए। इस सूचना का पालन न होने पर इसे परीक्षा में अनुचित साधनों का प्रयोग माना जाएगा और परीक्षार्थी विरुद्ध कार्यवाही की जाएगी, परीक्षा रद्द करने सहित।
9. पूछे जाने पर प्रत्येक परीक्षार्थी, निरीक्षक को अपना प्रवेश-पत्र दिखाएँ।
10. केन्द्र अधीक्षक या निरीक्षक की विशेष अनुमति के बिना कोई परीक्षार्थी अपना स्थान न छोड़ें।
11. कार्यरत निरीक्षक को अपना OMR उत्तर पत्र दिए बिना एवं उपस्थिति-पत्र पर दुबारा हस्ताक्षर किए बिना परीक्षार्थी परीक्षा हॉल/कक्ष नहीं छोड़ेंगे। यदि किसी परीक्षार्थी ने दूसरी बार उपस्थिति-पत्र पर हस्ताक्षर नहीं किए, तो यह माना जाएगा कि उसने OMR उत्तर पत्र नहीं लौटाया है और यह अनुचित साधन का मामला माना जाएगा। **परीक्षार्थी अपने बाएँ हाथ के अंगूठे का निशान उपस्थिति-पत्र में दिए गए स्थान पर अवश्य लगाएँ।**
12. इलेक्ट्रॉनिक/हस्तचालित परिकलक का उपयोग वर्जित है।
13. परीक्षा हॉल/कक्ष में आचरण के लिए परीक्षार्थी परीक्षण संस्था के सभी नियमों एवं विनियमों द्वारा नियमित हैं। अनुचित साधनों के सभी मामलों का फैसला परीक्षण संस्था के नियमों एवं विनियमों के अनुसार होगा।
14. किसी भी परिस्थिति में परीक्षा पुस्तिका और OMR उत्तर पत्र का कोई भाग अलग न करें।
15. **परीक्षा सम्पन्न होने पर, परीक्षार्थी हॉल/कक्ष छोड़ने से पूर्व OMR उत्तर पत्र निरीक्षक को अवश्य सौंप दें।** ***परीक्षार्थी अपने साथ इस परीक्षा पुस्तिका को ले जा सकते हैं।***

## READ THE FOLLOWING INSTRUCTIONS CAREFULLY :

1. The manner in which the different questions are to be answered has been explained in the Test Booklet which you should read carefully before actually answering the questions.
2. Out of the four alternatives for each question, only one circle for the correct answer is to be darkened completely with **Blue / Black Ball Point Pen** on **Side-2** of the OMR Answer Sheet. The answer once marked is not liable to be changed.
3. The candidates should ensure that the OMR Answer Sheet is not folded. Do not make any stray marks on the OMR Answer Sheet. Do not write your Roll No. anywhere else except in the specified space in the OMR Answer Sheet.
4. Handle the Test Booklet and OMR Answer Sheet with care, as under no circumstances (except for discrepancy in Test Booklet Code or Number and OMR Answer Sheet Code or Number), another set will be provided.
5. The candidates will write the correct Test Booklet Code and Number as given in the Test Booklet/OMR Answer Sheet in the Attendance Sheet.
6. A machine will read the coded information in the OMR Answer Sheet. Hence, no information should be left incomplete and it should not be different from the information given in the Admit Card.
7. Candidates are not allowed to carry any textual material, printed or written, bits of papers, pager, mobile phone, electronic device or any other material except the Admit Card inside the examination hall/room.
8. Mobile phones, wireless communication devices (even in switched off mode) and the other banned items should not be brought in the examination halls/rooms. Failing to comply with this instruction, it will be considered as using unfair means in the examination and action will be taken against the candidate including cancellation of examination.
9. Each candidate must show on demand his/her Admit Card to the Invigilator.
10. No candidate, without special permission of the Centre Superintendent or Invigilator, should leave his/her seat.
11. The candidates should not leave the Examination Hall/Room without handing over their OMR Answer Sheet to the Invigilator on duty and sign the Attendance Sheet twice. Cases where candidate has not signed the Attendance Sheet second time will be deemed not to have handed over the OMR Answer Sheet and dealt with as an unfair means case. **The candidates are also required to put their left hand THUMB impression in the space provided in the Attendance Sheet.**
12. Use of Electronic/Manual Calculator is prohibited.
13. The candidates are governed by all Rules and Regulations of the Examining Body with regard to their conduct in the Examination Hall/Room. All cases of unfair means will be dealt with as per Rules and Regulations of the Examining Body.
14. No part of the Test Booklet and OMR Answer Sheet shall be detached under any circumstances.
15. **On completion of the test, the candidate must hand over the OMR Answer Sheet to the Invigilator in the Hall / Room.** ***The candidates are allowed to take away this Test Booklet with them.***

www.careerindia.com